

அமரர்

# சிவஸ்ரீ பத்மநாதக்குருக்கள்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்


01.11.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முனையன் வளவு முருகமூர்த்தி துணை



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், தாவடியை வதிவிடமாகவும் கொண்ட

எமது குடும்பத் தலைவர்

# அமரர்

# சிவஸ்ரீ பத்மநாதக்குருக்கள்

அவர்களின்

**சிவபதப்பேறு குறித்த**

# நினைவு மலர்

**01. 11. 2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் வளமான வாழ்விற்கும்

வளர்ச்சிக்கும், பண்பட்ட பாசத்திற்கும்

மூலவேராக முன்நின்று நல்வழிகாட்டி

விடி வெள்ளியாய்த் திகழ்ந்த தெய்வமே!

ஆருயிரான எம் அரும் உறவே!

அறிவுதந்து செம்மையுற வாழ

வழி காட்டிநின்றீர்,

நின் பாதார விந்தங்களில்

இந் "நினைவு மலர்" தனை

சமர்ப்பித்து வணங்குகிறோம்.

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.



அமரர்

# சிவஸ்ரீ
# பத்மநாதக்குருக்கள்

அவர்கள்



அன்னை மடியில்
06.09.1956

சிவனின் அடியில்
23.10.2016

## திதி வெண்பா

சீர்மேவுந்துர்முகியின் ஐப்பசித்திங்கள் ஏழாம்
நாள் அபரபக்ஷ் அட்டமித்திதி தன்னில் பரமசின்
பதம் சேர்ந்தார் பத்மநாதக்குருவாமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

## தேவாரம்

சலம்பூ வொடுதூ பமறந் தறியேன்
தமிழோ டிசைபா டன்மறந் தறியேன்
நலந்தீங் கிலுமுன் னைமறந் தறியேன்
னுன்னா மமென்னா வின்மறந் தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வாய்
யுடலுள் ளுறுகு லைதவிர்த் தருளாய்
அலந்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தவா ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டு நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போது உன்
அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

ஏறு மயில் ஏறிவிளையாடு முகமொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசு முகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்க்கு முகமொன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரரைவ தைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகமொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருள வேண்டும்
ஆதியரு ணாசலம்அமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள்ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

* * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டி கவசம்



## நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித் து ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

## காப்பு

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டிற் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக! வருக! மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக! வருக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசவன் மருகா வருக வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணப சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக! வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக!
என்னை யாளு மிளையோன் கையிற்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலங்கு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பிற்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கிற் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனிற் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திருவடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியாற் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்க தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்லபூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டி யுருட்டு கைகால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறைக் கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவ நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தன் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையும் மாலையும் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை அதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# விநாயகர் கவசம்



வளர்ச்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா
யகர்காக்க; வாய்த்த சென்னி
அளவுபடா அதிகசௌந் தரதேக
மகோற்கடர்தாம் அமர்ந்து காக்க;
விளரறநெற் றியையென்றும் விளங்கியகா
சிபர்காக்க; புருவந் தம்மைத்
தளர்வில்மகோ தரர்காக்க; தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க;

கவின் வளரும் அதரங்கச முகர்காக்க;
தாள் அங்கணக் கிரீடர் காக்க;
நவில்சிபுகம் கிரிசைசுதர் காக்க; நனி
வாக்கைவிநா யகர்தாம் காக்க;
அவிர்நகைதுன் முகர்காக்க அள் எழிற்செஞ்
செவிபாச பாணி காக்க;
தவிர்தலுறா திளங்கொடி போல் வளர்மணிநா
சியைச்சிந்தி தார்த்தர் காக்க;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமருபூ முகந் தன்னைக் குணேசர்நனி
காக்க; களம் கணேசர் காக்க;
வாமமுறு இருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தாம் மகிழ்ந்து காக்க;
ஏமமுறு மணிமுலைவிக் கினவிநா
சன்காக்க இதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்க; அகட்
டினைத் துலங்கு ஏரம்பர் காக்க;

பக்கமிரண் டையுந்தரா தரர் காக்க;
பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்கினகரன் காக்க; விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாம் காக்க;
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்க; சகனத்தை அல்லல்
உக்ககண பன்காக்க; ஊருவைமங்
களமூர்த்தி உவந்து காக்க;

தாமுழந்தாள் மகாபுத்தி காக்க; இரு
பதம்ஏக தந்தர் காக்க;
வாழ்கரம்கிப் பிரப்பிரசா தனர்காக்க;
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச் செய் ஆசாபூ ரகர்காக்க
விரல்பதும அத்தர் காக்க;
கேழ்கிளரும் நகங்கள்விநா யகர்காக்க;
கிழக்கினிற்புத் தீசர் காக்க;

அக்கினியிற் சித்தீசர் காக்க; உமா
புத்திரர்தென் னாசை காக்க;
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க;
விக்கினவர்த் தனர்மேற்கென்னுந்
திக்கதனிற் காக்க; வாயுவிற்கசகன்
னர்காக்க; திகழு தீசி
தக்கநிதி பன்காக்க; வடகிழக்கில்
ஈசநந் தனரே காக்க;


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகதந்தர் பகல்முழுதுங் காக்க; இர
வினுஞ்சந்தி இரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்க; இராக்
கதர்பூதம் உறுவே தாளம்
மோனியைபேய் இவையாதி உயிர்த்திறத்தால்
வருந்துயரும் முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க;

மதிஞானம் தவம்தானம் மானம்ஒளி
புகழ்குலம்வண் சரீரம் முற்றும்
பதிவான தனம்தானி யம்கிருகம்
மனைவிமைந்தர் பயில்நட் பாதிக்
கதியாவுங் கலந்துசர்வா யுதர்காக்க;
காமர்பவுத் திரர்முன் னான
விதியாருஞ்சுற்றமெலாம் மயூரேசர்
எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க;

வென்றிசீ விதங்கபிலர் காக்க; கரி
யாதியெலாம் விகடர் காக்க;
என்றிவ்வா றிதுதனைமுக் காலமுமோ
திடின்நும்பால் இடையூறு ஒன்றும்
ஒன்றுறா, முனிவர்காள் ! அறிமின்கள்
யாரொருவர் ஓதினாலும்
மன்றஆங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருவெம்பாவை



ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாள் என்னே யென்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசுமலர்ப் பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தனா னந்தன் அமுதன் என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 3

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவன் ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீஆட் கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய். 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தனற் றில்லைச் சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால்ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா வெங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 17


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி யெல்லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சிவஸ்ரீ பத்மநாதக்குருக்கள் அவர்களின் வாழ்க்கை வரலாறு

**"புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப், பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகிக், கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய், வல்லசுரராகி முனிவராய்த் தேவராய், செல்லா அ நின்றவித் தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான் மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்"** என்னும் திருவாசகத்தின் வாக்கிற்கிணங்க பத்ம நாதக்குருக்கள் அவர்கள் மெய்யான பொன்னடிகள் கண்டு வீடுபேறடையும்பொருட்டு சிவபதம் அடைந்தார்.

இவர் பிரம்மஸ்ரீ நாராயண சர்மா, தவமணியம்மா தம்பதியினரின் இல்வாழ்க்கை நற்பயனாக **1956** ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் **06** ஆம் திகதி நெடுந்தீவு என்னும் பதியில் மூத்த தவப்புதல்வனாகப் பிறந்தார். இவருக்குத் துணையாக சந்தானலெட்சுமி, வரலெட்சுமி என்னும் சகோதரிகளுடன் தனது இளமைக் காலத்தை மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார். தாயின் செல்லப்பிள்ளையான, இவர் தனது ஆரம்பக்கல்வியை காங்கேசன்துறை, அமெரிக்க மிஷன் பாடசாலையில் பயின்றார். அந்தணராகப் பிறந்ததால் தன்குலத் தொழிலைக் குறையின்றி நிறைவேற்ற இணுவில் தர்மசாஸ்த்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ மகாதேவக்குருக்களிடம் சமஸ்கிருதக்கல்வியைக் கற்றுத் தெளிந்தார். தனது குலதெய்வமான மயிலிட்டி முனையன் வளவு முருகமூர்த்தி கோயிலில் பூசைசெய்து வந்தார். **1992** ஆம் ஆண்டு பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய தர்மகர்த்தா மகேஸ்வர சர்மா அவர்களின் புத்திரி மல்லிகாராணியைக் கைப்பிடித்து இல்லற தர்மத்தினை மேற்கொண்டதின் பயனாக வைத்தீஸ்வர சர்மா, சர்வேஸ்வர சர்மா என்னும் குமாரர்களைப் பெற்றெடுத்து நற்பண்புகளுடன் வளர்த்து யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் சேர்த்து கல்வி பயிற்றுவித்தார்.

**1993** ஆம் ஆண்டு திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் ஆலயத்தில் சிவாச்சார்ய அபிஷேகம் பெற்று தனது தாயின் சொந்த இடமான பெருக்கடி சித்திவிநாயகர் ஆலயம், வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரா தேவஸ்தானம், பொற்பதிப் பிள்ளையார் போன்ற தலங்களில் மஹோற்சவம் சிறப்பாக நடாத்தி வந்தார். மேலும் பல ஆலயக்களின் மஹா கும்பாபிஷேகத்திலும் கலந்து சிறப்பித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சில் வஞ்சமில்லாது எல்லோரிடமும் பழகும் சுபாவம் கொண்ட இவர் தனது முத்த சகோதரி சந்தானலெட்சுமியை சிவஸ்ரீ சுகுமாரக்குருக்களுக்கு மணம்முடித்து வைத்து கானப்பிரியா, நித்தியானந்தி, குகப்பிரியன், சுபாசினி, கஜனிகா என்னும் மருமக்களையும் இளைய சகோதரி வரலெட்சுமியை பன்னாலை வரத்தலம் விநாயகர் ஆலயத்தைச் சேர்ந்த மகேந்திர சர்மாவை மணம்முடித்து லட்சுமிநாராயண சர்மா, சஞ்சுத சர்மா என்னும் மருமக்களுடனும் களிப்புற்று வாழ்ந்து வந்தவர். தனது பெருமுயற்சியினால் யாழ்ப்பாணம், தாவடி என்னும் பதியில் தமக்கென ஒரு தனிக்காணியை சொந்தமாக வாங்கி மாடிவீடு கட்டி வாழ ஆசை கொண்டு வீடு பூர்த்தியாகும் நிலையில் திடீரென மாரடைப்பு நோயால், **22-10-2016** சனிக்கிழமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மறுநாள் காலை **23-10-2016** ஞாயிறு தன்னில் காலத்தின் நியதியால் காலனவன் கொண்டு சென்றான். அவரின் ஆத்மா பரம சிவன்பதம் அடையப் பிரார்த்திப்போமாக.

குருக்கள் அவர்கள் தனது குருத்தவப் பணியை இலங்கையில் உள்ள அனேக இடங்களிலும் நிகழ்த்தினார். வண்ணார்பண்ணை சிவன் கோவில், நெடுந்தீவு பெருங்கரடி பிள்ளையார் கோயில் போன்ற கோவில்களில் துவஜாரோகணத் திருவிழாவினை செய்து சிறப்பித்தார். மற்றும் பல கும்பாபிஷேக நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு சிறப்புச் சேர்த்தார். 'அந்தணன் என்போன் அறவோன்' என்னும் வாக்கிற்கு இணங்க வாழ்ந்து காட்டிய பெருந்தகை. எளிமையும் இனிமையும் நிறைந்த குணம் கொண்டவர்.

இவரது இருமக்களும் யாழ் இந்துக்கல்லூரி மாணவர்கள் ஆவர். கல்வியிலே சிறந்து விளங்குகின்றார்கள். இவரது மைத்துனர் சுகுமாரக்குருக்கள் சந்தானலட்சுமி தம்பதிகள் அவர்களின் செல்வங்கள் கானப்பிரியா (வைஷ்ணவி), நித்தியானந்தி, குகப்பிரியன், சுகாசினி, கஜனிகா ஆவார் மற்றும் மகேந்திர சர்மா வரலக்சுமி, பிள்ளைகள் லஷ்மிநாராயண சர்மா, சஞ்சுதன் சர்மா

குருக்கள் அவர்கள் தனது சகோதரிகளின் பிள்ளைகள் மீது மிகுந்த பாசத்தினைக் கொண்டிருந்தார். தனது இறுதிக் காலம் வரை ஆனைகோட்டையில் உள்ள வைரவர் கோவில் குருக்களாகப் பூசை செய்து வந்தார். தாயின் மீது மிகுந்த பாசம் கொண்டு இறுதிவரை தாயின் செல்லப் பிள்ளையாக இருந்துகொண்டே இறைவனடி சேர்ந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவின் புலம்பல்

தம்பி என்றழைத்தவுடனே
தயவுடனே வந்திடுவாய்
தனையன் நீ சென்றுவிட்டாய்
தத்தளிக்கின்றேன் தரணியிலே நான்

அம்மா என்றழைக்க ஆசயாய் ஒருமகன்நீ
ஐயாவிடம் சென்றுவிட்டாய் அன்னையவளைத்
தனித்து விட்டு

என் கடமை செய்வாய் என்று எண்ணி தாயவள்
புலம்புகின்றேன்
தந்தையவன் அழைத்து விட்டான்
தயவுடனே சேர்ந்து வாழ்

உன் மரணச் செய்தி கேட்டவுடனே
மன்றாடினேன் நான் இறைவனிடம்
இச்செய்தி பொய்யாக இருக்கக்கூடாதா என்று...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி புலம்பல்

மல்லிகா என்று அழைத்தவுடனே மனைவியாக
உங்கள் முன்னே காட்சியளிப்பேன்
தற்போது மல்லிகா என்ற ஒலி மட்டுமே
கேட்கின்றது அழைக்கும் உருவத்தைக் காணவில்லை.

கடைசிவரை காப்பாற்றுவேன் என்றுதான்
என்னைக் கரம் பிடித்தீர்கள் ஆனால்
உங்கள் கடைசி வார்த்தையை என்
காதால் கேட்கவில்லை என்று தான் புலம்புகின்றேன்.

மாங்கல்யம் ஏறியவுடனே எனது பெற்றோருக்கு
வாக்களித்தீர் கடைசிவரை காப்பாற்றுவேன்
என்று ஆனால் இடையிலே விட்டுச் சொன்ன
வாக்கை மீறிச் சென்றுவிட்டீர்களே.

அப்பா என்று அழைக்கும் முன்னே
அப்பனிடம் சென்று விட்டீர்களே
மனைவியவள் ஏங்குகின்றேன்
மணவாளனைக் காணவில்லை என்று.

மதிய வேளையிலே மறைவிலுற்றபோது
மருவிவந்த செய்தி மறக்க ஏலாது
மகன் மார்கள் மீண்டும் வருவாரா என்று
மன்னன் இறைவனிடம் மன்றாடுகின்றனர்.

உங்களை மனந்தளராது பார்த்த என்னை
பரிதவிக்க விட்டுச் சென்றதேனோ?
பட்டதுயரம் எல்லாம் போதும் என்றா
பரிதவிக்க விட்டுச் சென்றீர்கள்?

அரனவன் அழைத்தவுடனே
அமைதியுடன் சென்றீர்கள்
ஏனிந்த அமைதியோ?
மனைவி எனக்கு புரியவில்லை.

**அன்பு மனைவி**
**மல்லிகாராணி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த மகன் புலம்பல்

காலை ஐந்துமணி ஆனவுடனே பெரியவனே என்று ஒரு குரல் கேட்கும் நான் எழுந்தவுடன் கேட்கும் குரல் உங்கள் குரலாகவே இருக்கும். எல்லோரும் எழுந்தவுடனே சேவலின் ஒலியுடனே எழுவார்கள் ஆனால் நான் உங்களின் குரலைக் காணவில்லை என தற்போது புலம்புகின்றேன் அப்பா....

எல்லோருக்கும் எங்காவது போய் வீதி திரும்பினால் வீட்டிற்கு முன்னே நிறைகுடத்தைக் காண்பார்கள். ஆனால் நான் காண்பது உங்கள் முகம். நிறைகுடம் போல் இருந்த உங்களைத் தழும்பவிட்ட-தேனோ? அப்பா...

நீங்கள் பெரியவனே என்று கூப்பிடும் ஒலி கேட்கும்போதெல் லாம் அலட்சியமாகவே விட்டுவிட்டேன். தற்போது அக்குரல் கேட்காதா என்று ஏங்குகின்றேன் அப்பா....

உங்கள் ஆசைகளை நான் நிறைவேற்றவில்லை என்று தத்-தளிக்கின்றேன் அப்பா....

உங்கள் ஆசைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற வைராக்கியத்துடனே கடின உழைப்பால் உங்கள் ஆசைகளை நிறை வேற்றுகின்றேன்.

அப்பா அப்பா அப்பா!

**அன்பின் மகன்**
**வைத்தீஸ்வரன் (பெரியவன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய புதல்வன் புலம்பல்

சின்னவனே என்று அழைக்கும் போதெல்லாம் சினக்காது உங்கள் முன்னே வந்து நிற்பேன். தற்போது அக்குரல் கேட்காது என்று கேட்டவுடனே சிறகொடிந்த பறவை ஆகிவிட்டேன் அப்பா...

உங்களின் ஆசை எனக்குப் பூணூல் அணிந்து அத்திரு உருவக்காட்சியைக் காணவேண்டும் என்பதுதான் ஆனால் அக்காட்சியைக் காணத் தற்போது நான் சம்மதிக்கவில்லை எனது படிப்பையும் முடித்தவுடனே நிகழ்த்த வேண்டுமென்றே கூறினேன். ஆனால் அதைக் காணாது சென்றுவிட்டீர்களே அப்பா.

காலனவன் காவுகொண்ட வேளையிலே
காணமுடியாது போய்விட்டது என்று
எண்ணிப் புலம்புகின்றேன் அப்பா.

எனது கனவும் எனது இலட்சியங்களையும்
என் முன்னே காட்ட வேண்டும் என்று
எண்ணினேன் உனது கனவு என்னை ஒரு
பொறியியலாளராகப் பார்க்க வேண்டும் என.

ஆனால் அதைக் காணாது போய்விட்டீர்களே
என்னை ஒரு பெரியநிலைக்குக் கொண்டு
வந்து எல்லோருடைய மனதையும்
குளிரவைக்கவேண்டும் என்பது தான்
உங்களது ஆசை அதை நான் நிறைவேற்றுவேன்

அதைப் பார்ப்பதற்கு நீங்கள் இல்லை
என்று புலம்புகிறேன் கதறுகின்றேன்.
அப்பா! அப்பா! அப்பா!

**அன்பு மகன்**
**சர்வேஸ்வரன் (சின்னவன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனதருமை அண்ணா நீ மறைந்தது எங்கே?

உன்னிடம் நான் வருவதற்கு நின்ற வேளையில் என்னிடம் நம்ப முடியா செய்தி ஒன்று நண்பகலில் கேட்ட போது கண்கள் கலங்கிய நிலையில் கைகள் பதறின. சந்தானம் என்ற உன் தங்கை உனக்காகக் கட்டிய உணவுப் பொதி உன் கைக்கு வராமலே போய்விட்டதே!

மனமார நீ கதைப்பாயெனவே உன் தங்கையவள் உன்னை நாடிய தருணங்கள் வேண்டாமென்றே போய்விட்டாயோ? மனதில் நிறை ந்திருக்கும் கவலைகளை மனம் திறந்து கூறி இருப்பாய், பட்ட கவலை களுடனே பட்டுப் போனதே உனது உடல். மனம் விட்டுப் பேச மறுத்-ததேனோ நாங்கள் உன்னை நாடி வரு முன்னே முந்தி விட்டான் காலன் உன்னைக் பிறப்பும் இறப்பும் நியாயம்தான் - ஆனால் எம் மனம் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்நியதியைக் கண்ணீர்கள் சொட்டினாலும் தீராது - எம் மன ஏக்கம்.

ஒரு பார்வை ஒரு வார்த்தை செய்திருந்தால் அமைதியுடன் வேண்டுவேன். மண்ணுலகம் நிம்மதியில்லை என்றா விண்ணுலகு சென்றாய்.

உன் கவலைகளுக்கு ஒரு விளக்காய் தங்கை சந்தானம் இருக்கின்றாள் என்று மறந்து சென்றதேனோ!

**உனது அன்புக் தங்கை**
**சந்தானம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைய சகோதரி வரதியின் புலம்பல்

அண்ணா என்றழைக்க ஒரு குரலில் என்னடி என்று கேட்பாய். ஆலமரமாய் நீயிருந்து என்னை எப்பவும் கலங்காது உனது குடும்பத்து டன் சந்தோசமாயிரு அதுவே போதும் என்பாய். உனது செய்தியை நான் கேட்ட வேளை நம்பமுடியவில்லை உன்னைப் பார்த்து விடுவேன் என வைத்தியசாலைக்கு ஓடோடி வந்தேன். நீயோ கண் விழியாது உயிர் உன்னை விட்டுப் பிரிந்த நிலையில் காட்சி தந்தாய்.

நானோ உனக்கு இந்த நிலைமை இவ்வளவு விரைவில் வரு மென சிறிதளவும் நினைக்கவில்லை. எந்த வேளையிலும் நீ நன்றாய் உன்மக ளாய் எனத்தான் எண்ணினேன் ஆனால் நீயோ விண்ணுலகை விரும்பினாய். மயிலிட்டி விரைவில் சென்று அவ்விடத்தில் உனது புகழை நிலைநாட்டி, உனது வதிவிடத்தில் நீ சுதந்திரமாக வாழ்வாய் என நான் நினைத்தேன். ஆனால் நீயோ விண்ணுலகே சுதந்திரம் என நினைத்து என்னைக் கண்ணீரில் கலங்க வைத்து சென்றுவிட்டாய் அண்ணா.

**அன்பின் சகோதரி**
**வரதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் மாமன் கண்டி இரத்தினக்குருக்கள் புலம்பல்

செயலிழந்த பத்தாவின் புலம்பல் செய்தி தாய் மாமனின் சப்தநாடிகளும் தாய் மாமன் என்று நான் ஒருவர் இருக்கையில் என் முன் நாடியே நீ முந்திச் சென்ற காரணம் நானறியேன் - மருமகனே

பத்தா என்றழைத்து யாழ்ப்பாணம் வந்திறங்கினால் என்னை எல்லா இடமும் நீ கூட்டிச் சென்று என் தேவைகளைப் பூர்த்தி செய்த நாட்களை எண்ணி எண்ணி நான் மனம் குமுறும் சத்தம் உனக்குக் கேட்கவில்லையா? நீ ஏன் மெய் மறந்து முன் நாடி சென்று விட்டாய். நானோ கண்டியில் இருந்து கதறுகின்றேன் காதில் உனக்கு ஒலி கேட்கும் என நம்புகின்றேன். பத்தா, பத்தா மண்ணுலகு விட்டு நீ விண்ணுலகு விரைந்து சென்ற பொழுது உனது செய்தியை நான் நம்பவில்லை ஆனாலும் நம்ப முடியாமலும் இருக்கவில்லை. உனது முகம் பார்க்க ஓடோடி வந்தேன் நீ மீளாத் துயிலில் ஆழ்ந்து விட்டடாய் பத்தா.

**உனது அன்பின்**
**தாய் மாமன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன் நிகர் இல்லா தாய் மாமனுக்கு

நம்பமுடியா செய்தி இல்லவே இல்லை எங்கள் மனசு ஏற்றுக் கொள்ள முடியவில்லையே! நண்பகலில் கேட்ட போது நாடிகள் அடங்கிவிட்டதாம் பட்ட கவலைகளுடன் பட்டுப் போனதே உங்கள் உடல் மனம் விட்டுப் பேச மறுத்ததேனோ - காலம் நங்கள் உள்களை நாடி வர முன்னே முந்திவிட்டான் காலனவன் அவன் பிறப்பும் இறப்பும் நியதிதான் ஆனால் எம் மனசு ஏற்க மறுத்தது.

இந் நியதியை. கண்ணீர் சொட்டினாலும் தீராத எம் மன ஏக்கம் ஒரு பார்வை, ஒரு வார்த்தை செய்திருந்தாலே காணும் நங்கள் அமைதியுடன் வேண்டுவோம். உங்களது அமைதிக்கு விண்ணுலகே சிறந்தது என்று விரைந்த விட்டீர்கள். புன்னகைக்குக் குறைவில்லா வதனம் கொண்டு எம் இல்லம் தினம் நாடி வருவீர்கள். பெற்ற தாய், உடன் பிறந்த சகோதரிகள், மருமக்கள் என நினைத்த எம் முடன் கலந்திருப்பீர்கள் உங்கள் குரல் ஒலி கேட்டு நகையாடிய நாட்கள் இனி வருமா?

கள்ளமில்லா உங்கள் வதனத்தில் என்ன கவலைகள் மூடிக் கொ ண்டதோ. காலனவன் காவு கொண்ட காரணமாயிற்றே பெற்றதாய் புலம்புகிறாள் பெற்றேன் என் கடமை புரிவான் என ஏமாற்றி விட்டுச் சென்றதேனோ? தங்கைகள் இருவருடன் தன்மையான அண்ணாவாக வாழ்ந்தீர். மகன்மார் இருவர் கதறுவது கேட்கவில்லையா வாழ்க்கைத் துணைக்கு வந்தவள் எப்போதும் என்னுடன் துணையாக இருப்பாய் என்பதைப் பொய்யாக்கிவிட்டீர்களே.

எங்கு இருந்தாலும் நீங்கள் நிம்மதியாக இருக்க வேண்டும். தாய்க்கோர் அண்ணனாய் - தாய் மாமனாய் இருந்தீர்களே காணும் போதெல்லாம் கனத்த குரலிலே கண்ணப்பா, லக்ஷ்சன், சஞ்சுதன் என்ற அழைப்பீர்களே இனி எங்கு கேட்போம் உங்கள் குரலை. வஞ்சகமில்லா மனதுடனே எங்கள் வீடு வந்து போவீர்கள். திடீரென இந்த முடிவு எடுத்தீர்கள். உங்கள் ஆசை மருமக்கள் கதறி அழும் குரல் காதில் கேட்கவில்லையா? நெஞ்சில் அடித்துக் கதறுகின்றோம் மனம் - நெகிழவில்லையோ நீங்காத கவலைகளுடன் உங்கள் நிம்மதிக்கா இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மருமக்கள்**

**வைஷ்ணவி, நித்தியானந்தி, சுகாசினி, கஜனிகா,**
**குகப்பிரியன், லக்ஷ்சன், சஞ்சுதன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 - 09 - 1956 | 23 - 10 - 2016 |

எமது சிவனடியார் தொண்டர் மடாலயத்தின் தலைவர்
மகேந்திரசர்மா அவர்களின் மைத்துனர்

## அமரர் நாராயணசர்மா பத்மநாதக்குருக்கள்

மௌனங்கள் சூழ்ந்து கொள்ள
மனங்கள் மௌனம் கொள்ள
உங்களைப் பார்த்திருந்த விழிகள்
கண்ணீரால் கரை புரள
உங்களை இழந்ததால்
எங்கள் மனம் துடிக்குதைய்யா
அன்புக்கு இலக்கணமாய்
தரணியில் வாழ்ந்தவரே
விடியல்கள் அஸ்தமனமாக
விலகிவிட்ட உங்கள்
ஆத்மா சாந்தியடைய
இறைஞ்சுகின்றன இதயங்கள்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**நிர்வாகசபை**
சிவனடியார் தொண்டர் மடாலயம்
பன்னாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந் நன்றி கொன்ற மகற்கு"**

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து வழிகாட்டி, எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு, இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் **சிவஸ்ரீ பத்மநாதக்குருக்கள்** அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு ஓடோடி வந்து ஆறுதல்கூறி துன்ப துயரங்களில் பங்குகொண்டோருக்கும், தொலை பேசி மூலமும், பத்திரிகை மூலமும் அஞ்சலி செலுத்தியோருக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய அன்பர்களுக்கும், மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், இன்றைய தினம் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை-யை நடத்தி வைத்துள்ள அந்தண சிவாச்சாரியார்களுக்கும், எமது அழைப்பை ஏற்று இன்றைய ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டுள்ள அனைவருக்கும் மற்றும் இம்மலரை அழகுற அச்சிட்டுத்தந்த கரிகணன் (தனியார்) நிறுவனத்தினருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org